பிரஸார் பாரதி
இந்திய வானொலி, சென்னை-4

09 04 2025 WEDNESDAY 6.30 PM

## மாநிலச் செய்திகள்

## தலைப்புச் செய்திகள்

- திருப்பதி - Pakala - காட்பாடி இடையே இரண்டாவது ரயில்பாதை அமைக்கும் திட்டத்திற்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

- பரந்தூர் விமான நிலையத் திட்டத்திற்கு கொள்கை அளவில் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளதாக சிவில் விமான போக்குவரத்துத்துறை அமைச்சர் திரு ராம்மோகன் நாயுடு தெரிவித்துள்ளார்.

- நீட் தேர்வுக்கு எதிரான சட்டப்போராட்டத்தை தொடர்ந்தால் வெற்றி கிடைக்கும் என்று தாம் நம்புவதாக முதலமைச்சர் திரு மு.க.ஸ்டாலின் கூறியுள்ளார்.

- உச்சநீதிமன்றத்தின் தீர்ப்பின்படியே நாடு முழுவதும் நீட் தேர்வு அறிமுகப்படுத்தப்பட்டதாக பிஜேபி மாநிலத்தலைவர் திரு அண்ணாமலை தெரிவித்துள்ளார்.

- உலகக்கோப்பை Wushu போட்டியில் இந்தியா ஒரு தங்கம், ஒரு வெள்ளிப்பதக்கம் வென்றது.

*---- இனி விரிவான செய்திகள் ----*

<<<<<<>>>>>>

திருப்பதி - Pakala - காட்பாடி இடையே இரண்டாவது ரயில்பாதை அமைக்கும் திட்டத்திற்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

இன்று புதுதில்லியில் பிரதமர் திரு நரேந்திர மோடி தலைமையில் நடைபெற்ற அமைச்சரவைக்கூட்டத்தில் இதற்கான முடிவு மேற்கொள்ளப்பட்டது.

இதனை செய்தியாளர்களிடம் தெரிவித்த தகவல் ஒலிபரப்புத்துறை அமைச்சர் திரு அஷ்வினி வைஷ்ணவ், ஆயிரத்து 332 கோடி ரூபாய் செலவில் 104 கிலோமீட்டர் தொலைவிற்கு இந்த பாதை அமைக்கப்படுவதாக தெரிவித்தார்.

இதன்மூலம், 400 கிராமங்களை சேர்ந்த 14 லட்சத்திற்கும் மேற்பட்டோர் பயனடைவார்கள் என்றும் அவர் கூறினார்.

நாடு முழுவதும் நவீன முறையில் பாசன வசதிகளை மேம்படுத்துவதற்காக ஆயிரத்து 600 கோடி ரூபாய் மதிப்பிலான சிறப்புத்திட்டம் ஒன்றை செயல்படுத்துவதற்கும் இக்கூட்டத்தில் ஒப்புதல் அளிக்கப்பட்டதாக அவர் தெரிவித்தார்.

இதற்காக 78 திட்டங்கள் செயல்படுத்தப்பட உள்ளதாகவும், இதன்மூலம் 80 ஆயிரத்திற்கும் மேற்பட்ட விவசாயிகள் பயனடைவார்கள் என்றும் திரு அஷ்வினி வைஷ்ணவ் கூறினார்.

இதற்கிடையே, மத்திய அமைச்சரவையின் இந்த முடிவுகள் தமிழகம் - ஆந்திரா இடையேயான ரயில் கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்கும், விவசாயிகளின் வாழ்வாதாரத்தை உயர்த்துவதற்கும் உதவிடும் என்று மத்திய இணையமைச்சர் திரு எல். முருகன் கூறியுள்ளார்.

<<<<<<>>>>>>

பரந்தூர் விமான நிலையத் திட்டத்திற்கு சிவில் விமான போக்குவரத்துத்துறை கொள்கை அளவில் ஒப்புதல் அளித்துள்ளதாக அத்துறைக்கான அமைச்சர் திரு ராம்மோகன் நாயுடு கூறியுள்ளார்.

சமூக வலைதளத்தில் இதனை தெரிவித்துள்ள அவர், நாடு முழுவதும் விமான கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதில் பிரதமர் திரு நரேந்திர மோடி தலைமையிலான மத்திய அரசு உறுதியுடன் உள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

குறிப்பாக, தில்லி, மும்பை, சென்னை போன்ற பெரு நகரங்களில் அதிகரித்துவரும் விமான பயணிகளின் தேவையை பூர்த்தி செய்வதற்கு ஏற்ப கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தப்படும் என்றும் திரு ராம்மோகன் நாயுடு கூறியுள்ளார்.

<<<<<<>>>>>>

நீட் தேர்வுக்கு எதிரான சட்டப்போராட்டத்தை தொடர்ந்தால் வெற்றி கிடைக்கும் என்று தாம் நம்புவதாக முதலமைச்சர் திரு மு.க.ஸ்டாலின் கூறியுள்ளார்.

இதுதொடர்பாக, இன்று சென்னையில் நடைபெற்ற சட்டப்பேரவை அனைத்துக்கட்சி தலைவர்கள் கூட்டத்திற்கு தலைமை வகித்து பேசுகையில் அவர் இவ்வாறு கூறினார்.

அஇஅதிமுக மற்றும் பிஜேபி இக்கூட்டத்தில் பங்கேற்கவில்லை.

இதற்கிடையே, நீட் தேர்வு அறிமுகப்படுத்தப்பட்ட பின்னரே தமிழகத்தில் சாமானிய குடும்ப பின்னணி கொண்ட மாணவர்களும், அரசுப்பள்ளி மாணவர்களும் மருத்துவக்கல்வி படிக்கும் வாய்ப்பினை பெற்றுள்ளதாக பிஜேபி மாநிலத்தலைவர் திரு அண்ணாமலை கூறியுள்ளார்.

இதுதொடர்பாக சமூக வலைதளத்தில் அவர் விடுத்துள்ள அறிக்கையில், உச்சநீதிமன்றத்தின் தீர்ப்பின்படியே நாடு முழுவதும் நீட் தேர்வு அறிமுகப்படுத்தப்பட்டதாக தெரிவித்துள்ளார்.

நீட் தேர்வுக்கு விலக்கு பெற வேண்டும் என்ற எண்ணம் திமுக-விற்கு இருந்திருந்தால் அக்கட்சி உச்சநீதிமன்றத்திற்கு சென்றிருக்க வேண்டும் என்றும் அவர் கூறியுள்ளார்.

டாஸ்மாக் ஊழல் விசாரணைக்கு தடை கேட்டு உச்சநீதிமன்றம் செல்லும் திமுக அரசு, இப்பிரச்சினைக்கு நீதிமன்றம் செல்லாமல் அனைத்துக்கட்சி கூட்டம் நடத்துவது ஏன் என்றும் திரு அண்ணாமலை வினவியுள்ளார்.

<<<<<<>>>>>>

கட்டுமான தொழிலாளர் நலவாரியத்தில் பதிவு செய்துள்ளவர்களின் குழந்தைகள் உயர்கல்வி பயில்வதற்காக வழங்கப்பட்டுவரும் கல்வி உதவித்தொகையில், கூடுதலாக ஆயிரம் ரூபாய் உயர்த்தி வழங்கப்படும் என்று தொழிலாளர் நலத்துறை அமைச்சர் திரு சி வி கணேசன் கூறியுள்ளார்.

இன்று பேரவையில் தமது துறை மானியக்கோரிக்கை மீதான விவாதத்திற்கு பதிலளித்து அவர் பேசினார்.

அரசு தொழிற்பயிற்சி நிலையங்களில் உள்ள 50 விடுதிகள், 22 கோடி ரூபாய் செலவில் மேம்படுத்தப்படும் என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

<<<<<<>>>>>>

தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியின் முன்னாள் தலைவர் குமரி அனந்தன் மறைவுக்கு பிரதமர் திரு நரேந்திர மோடி இரங்கல் தெரிவித்துள்ளார்.

சமூக வலைதளத்தில் அவர் விடுத்துள்ள செய்தியில், தமிழகம் மற்றும் தமிழ் மொழியின் வளர்ச்சிக்காக அரும்பாடுபட்டவர் குமரி அனந்தன் என்று புகழாரம் சூட்டியுள்ளார்.

இதற்கிடையே, குமரி அனந்தனின் இறுதிச்சடங்கு முழு அரசு மரியாதையுடன் இன்று மாலை சென்னையில் நடைபெற்றது.

<<<<<<>>>>>>

சென்னை ஐ ஐ டி, தனியார் பங்களிப்புடன் இணைந்து அனைவருக்கும் செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பம் கிடைக்க வேண்டும் என்பதற்காக செயற்கை நுண்ணறிவு தளத்தை ஏற்படுத்தியுள்ளதாக அதன் இயக்குனர் திரு காமகோடி கூறியுள்ளார்.

இதுதொடர்பாக, இன்று சென்னையில் செய்தியாளர்களிடம் பேசுகையில் அவர் இவ்வாறு கூறினார்.

*(சவுண்ட் பைட் - காமகோடி – 67 செகண்ட்ஸ்)*

<<<<<<>>>>>>

வங்கக்கடலில் நிலை கொண்டுள்ள ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வுப்பகுதி வலுவிழக்கக்கூடும் என்று வானிலை ஆய்வு மையத்தின் தென் மண்டல தலைவர் திருமதி அமுதா கூறியுள்ளார்.

எமது செய்தியாளரிடம் பேசுகையில் அவர் இவ்வாறு கூறினார்.

*(சவுண்ட் பைட் - அமுதா (1) – 40 செகண்ட்ஸ்)*

தமிழகத்தின் ஒரு சில பகுதிகளில் கனமழைக்கு வாய்ப்புள்ளதாகவும் திருமதி அமுதா தெரிவித்தார்.

*(சவுண்ட் பைட் - அமுதா (2) – 32 செகண்ட்ஸ்)*

<<<<<<>>>>>>

*மாவட்டச் செய்திகள்*

திருப்பத்தூர் மாவட்டத்தில் காவல்துறை சார்பில் பொதுமக்கள் குறைதீர் கூட்டம் காவல்துறை கண்காணிப்பாளர் திருமதி ஸ்ரேயா குப்தா தலைமையில் இன்று நடைபெற்றது.

--------

திருவண்ணாமலை மாவட்டத்தில் சட்டப்பணிகள் ஆணைக்குழு சார்பில் வழக்குகளுக்கு சமரச தீர்வுகாண்பது தொடர்பான விழிப்புணர்வு பேரணியை ஆட்சியர் திரு தர்பகராஜ் இன்று தொடங்கிவைத்தார்.

-------------

பெரம்பலூர் மாவட்டம் அகரம் சீகூர் கிராமத்தில் நடைபெற்ற மக்கள் தொடர்புத்திட்ட முகாமில் ஆட்சியர் திருமதி கிரேஸ் பச்சாவ் இன்று பங்கேற்றார்.

-------------

காஞ்சிபுரம் மாவட்டத்தில் ஒன்றரை கோடி ரூபாய் மதிப்பிலான அரசின் நலத்திட்ட உதவிகளை ஆட்சியர் திருமதி கலைச்செல்வி மோகன் பயனாளிகளுக்கு வழங்கினார்.

<<<<<<>>>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

உலகக்கோப்பை Wushu போட்டியில் இந்தியா ஒரு தங்கம், ஒரு வெள்ளிப்பதக்கம் வென்றது.

சீனாவில் நடைபெற்றுவரும் இப்போட்டியின் ஆடவர் 75 கிலோ எடைப்பிரிவில் முகேஷ் சௌத்ரி தங்கப்பதக்கம் வென்றார்.

மகளிர் 48 கிலோ எடைப்பிரிவில் Chhava வெள்ளிப்பதக்கம் வென்றார்.

-----------------

மெக்ஸிகோ சாலஞ்சர் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் ஸ்ரீராம் பாலாஜி - மெக்ஸிகோவின் Miguel Angel Reyes Varela இணை காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

ஆடவர் இரட்டையர் பிரிவு காலிறுதிக்கு முந்தைய சுற்றில் இந்த இணை, 6-3, 6-2, என்ற செட் கணக்கில், இத்தாலியின் Stefano Napolitano - பிரேசிலின் Matues Alves இணையை வென்றது.

-------------

ஆசிய பேட்மிண்டன் சாம்பியன் போட்டியில் இந்தியாவின் ரூபன்குமார் ரத்ன சபாபதி – ஹரிஹரன் Amsakarunun இணை காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளது.

ஆடவர் இரட்டையர் பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில் இந்த இணை, 21-3, 21-12 என்ற செட் கணக்கில் இலங்கையின் Madhuka Dulanjana – Lahiru Weerasinghe இணையை வென்றது.

----------------

பாரிஸில் நடைபெற்றுவரும் சர்வதேச செஸ் போட்டியில் இந்தியாவின் Arjun Erigaisi காலிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

*<<<<<<END>>>>>>*